Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரமோதூத ஷு பங்குனி மீ 01 உ வெள்ளிக்கிழமை [15-03-1991] UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 108

# திலகருடன் பிரட்மன் ஜெனிவாவில் பேச்சு?

## விவரங்கள் வெளியிடப்படவில்லை

ஜெனிவா, மார்ச் 15

ஜனாதிபதி பிரேமதாசாவின் வெளிவிவகார அலுவல்கள் ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன், தமிழீழ விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. லோறன்ஸ் திலகருடன் ஜெனிவாவில் வைத்துப் பேச்சு நடத்தியதாக ஏஜன்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் அந்தப் பேச்சுக்களின் விவரங்கள் வெளியிடப்படவில்லை.

ஸ்ரீலங்காவின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் அரசாங்கப் படைகளுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்து வரும் யுத்தத்தை நிறுத்துவது குறித்தும்—

இரு தரப்பாரும் மீண்டும் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கி நாட்டின் இனப் பிரச்சினைக்கு தீர்வு ஒன்றைக் காண்பதன் அவசியம் குறித்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ரயில் தப்பியது!

பொலனறுவை அருகே நேற்று ரயில் ஒன்றுக்கு குண்டு வைக்க எடுக்கப்பட்ட முயற்சியில் ரயில் தப்பியது.

ரயில் பாதையின் பாலம் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டு ரயில் வருவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னரே வெடித்தது என்றும்—

பின்னர் வந்த ரயில் அந்த இடத்தில் விழுந்து விபத்துக்குள்ளானது.

ரயில் என்ஜினும் பயணிகள் பெட்டி ஒன்றும் தடம் புரண்டன என்றும்—

பயணிகளுக்கு பாதிப்பு ஏற்படவில்லை என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டதாக இந்திய வானொலி அறிவித்தது.

## மடு முகாம் அகதிகளை இடம் மாற்றுவதில்லை

### அரசின் முடிவில் மாற்றம்

மடு மாதா கோயில் பகுதியில் தங்கியுள்ள அகதிகளை அங்கிருந்து வெளியேறுமாறு கேட்பது இல்லை என்று அரசு தீர்மானித்துள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் அகதிகள் தூதரக அதிகாரிகள் மற்றும் தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் அரசு அதிகாரிகள் நடத்திய பேச்சுக்களைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க நேற்றுத் தெரிவித்தார்.

அகதிகளை மடுமாதா ஆலயப் பிரதேசத்தினுள் வைத்திருக்கும்படி தொண்டர் நிறுவனங்களையும் தேவாலய பரிபாலகர்களையும் அரசு பணித்துள்ளதாகவும்—

திட்டமிட்டபடி, மடுமாதா ஆலய பிரதேசத்தைச் சுற்றி உள்ள பகுதிகளில் இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜெனரல் ரணதுங்கா சென்னார். [உ-எ]

## ஆனையிறவில் ஷெல் வீச்சு

யாழ்ப்பாணம், மார்ச் 15

ஆனையிறவு முகாமில் இருந்து நேற்று பிற்பகல் 1 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை இயக்கச்சிப் பகுதி குடியிருப்புக்களை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

சேத விவரங்கள் தெரியவரவில்லை. [ஒ]

## அமைச்சரவையில் மாற்றம்

கொழும்பு, மார்ச் 15

ஜனாதிபதி பிரேமதாஸா நேற்று அமைச்சரவையில் இல மாற்றங்களைச் செய்தார்.

காணி, நீர்ப்பாசன மற்றும் மகாவலி அமைச்சராக திரு. காமினி அத்துக்கோறள நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இதுவரை இப் பதவியை வகித்து வந்த திரு. பி. தயாரத்னா புனர்வாழ்வு, புனர்நிர்மாண மற்றும் சமூகநலத் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. காமினி அத்துக்கோறள இதுவரை மகாவலி அபிவிருத்தி அமைச்சராக மட்டுமே பதவி வகித்து வந்தார்.

புனர்வாழ்வு, புனர்நிர்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தடைப்பட்ட வெங்காயம் ஓமந்தையில் விற்பனை

யாழ்ப்பாணம், மார்ச் 15

வடக்கிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்ட லொறிகள் பல ஓமந்தை, நொச்சிமோட்டைப் பகுதிகளில் தரித்து நிற்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

லொறிகளில் கொண்டு செல்லப்பட்ட வெங்காயம் அழுகி பழுதடையும் நிலையை எட்டி விட்டது. இதனால் சில லொறிக்காரர் வெங்காயத்தை அங்கேயே விற்பனை செய்யத் தொடங்கி உள்ளனர்.

இதேவேளை நேற்று தாண்டிக்குளம் பகுதியூடாக — இரு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ரஞ்சன் கொலைக்கு புலிகளே காரணமாம்!

### அரச தரப்பினரின் முடிவு இது

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவை விடுதலைப் புலிகளே கொலை செய்தனர் என்று புலன் விசாரணையாளர்கள் முடிவு செய்துள்ளனராம்.

அவர்கள் இக்கொலை தொடர்பாக ஏனைய சந்தேகங்களை நிராகரித்து விட்டனர் என்று பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க நேற்று வாராந்த செய்தியாளர்மாநாட்டில் தெரிவித்தார்.

அமைச்சர்ரஞ்சனைத்தாமே கொலைசெய்தனர் என்பதை விடுதலைப்புலிகள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்கா சொன்னார்

அவ்வாறு அதனை விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொண்டால் சர்வதேசச் சட்டப்படி அவர்களுக்கு எதிராக அரச நடவடிக்கை எடுக்கும் என்றும் திரு. விக்கிரமசிங்கா சொன்னார். [உ-எ]

சட்ட விதிகளுக்கு முரணாக

## ஈழத்தமிழரை காவலில் வைக்க இந்திய உயர்நீதிமன்றம் தடை

சென்னை, மார்ச் 15

இலங்கைத் தமிழர் எவரையும் சட்ட விதிமுறைகளைப் பின்பற்றாமல் காவலில் வைக்கக்கூடாது என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அரசியல் சாசனத்தில் கூறப்பட்டுள்ள தனிமனித சுதந்திர உரிமை வெளிநாட்டுப் பிரசைகளுக்கும் உண்டு என்றும் உயர்நீதிமன்ற நீதியரசர்கள் பி. எஸ். மிஸ்ரா, எஸ். ஜனார்த்தனன் தங்கள் தீர்ப்பில் தெரிவித்தனர்.

தமிழகத்தில் காவலில் வைக்கப்பட்டு இருந்த இலங்கைத் தமிழர் ஒருவரை விடுதலை செய்யும்படி கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆட்கொணர்வு மனு ஒன்றின் விசாரணையின் போது நீதியரசர்கள் இதனைத் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட இலங்கைத் தமிழரை உடனடியாக விடுதலை செய்யும்படியும் நீதியரசர்கள் தமிழக அரசுக்கு உத்தரவிட்டனர். [ஒ-எ]

## மல்லாகத்தில் பெண் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 15

நேற்று கட்டுவன் இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மல்லாகத்தில் பெண் ஒருவர் காயமடைந்தார்.

வயாவிளானில் இருந்து இடம்பெயர்ந்து வந்து மல்லாகத்தில் குடியிருந்த நடராசலிங்கம் யோகேஸ்வரி [வயது 48] என்ற பெண்ணே காயமடைந்தவராவார். [ஒ-15]

## யாழ் மாவட்டத்துக்கு தொடர்ந்து உலர் உணவு

### இன்று அ. அதிபர் அறிவிப்பார்

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ். மாவட்டத்தில் வசிக்கும் மக்களுக்கு மேற்கொண்டும் விசேட உலர் உணவு விநியோகம் கிடைக்கும் சாத்தியம் உருவாகியுள்ளதாம்.

கொழும்பிலிருந்து நேற்று இங்கு திரும்பிய அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட்இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் மக்கள்படும் சஷ்டங்கள் குறித்து கொழும்பில் உள்ள அதிகாரி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முரளி



அகதிகளைச் சிறை வைக்கிறவையளையும் சிறை ... தீர்ப்பளிக்காத்தான் உவையள் இருந்துவினம்......!

## திருமலை கிளிவெட்டியில் இருவர் குத்திக்கொலை

திருகோணமலை மாவட்டம் கிளிவெட்டியில் கடந்த முதலாம் திகதிக்கும் 10 ஆம் திகதுக்கும் இடையிலான காலத்தில் கைதான 3பொதுமக்களில் இருவரை இராணுவத்தினர் கத்தியால் குத்திக் கொலை செய்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிவெட்டியைச் சேர்ந்த கந்தையா மகேஸ்வரன் [22 வயது] என்பவரும், பெயர் தெரியாத மற்றொருவருமே கொலை செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கைதான மூன்றாவது நபருக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை. [ஒ]

## தோப்பூரில் இளைஞர் படையினரால் படுகொலை

திருகோணமலை மாவட்டம் தோப்பூரில் வைத்து ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கடந்த 2 ஆம் திகதி கிளிவெட்டியைச் சேர்ந்த அருளானந்தம்விஜயராஜா[33வயது] என்பவரை கைது செய்தனர்.

கடந்த 7 ஆம் திகதி இவரை இராணுவத்தினர் முகாமில் வைத்து சுட்டுக் கொன்றுவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

புத்தம் புதிய அவரி 5அந்தர் [250 K. G.] மேடைத் தராசு உடன் விற்பனைக்கு உண்டு. விவரங்களுக்கு மல்லிகா கூல்பார், சந்தையடி, மானிப்பாய். [14926]

**தாதியர் தேவை**

விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ள வைத்தியசாலைக்கு அனுபவமுள்ள தாதியர் உடன் தேவை. நேரில் வரவும். டாக்டர் தணிகாசலம், 16, இலந்தைக்குளம் வீதி, கொழும்புத்துறை. [16117]

**கலர்ப்பிலிம் பிறிண்டிங்**

கலர்ப் பிலிம் சுருள்கள் விரைவாகவும், குறைந்த செலவிலும் பிறிண்டிங் செய்து தரப்படும். Quick Photo மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம், கே. கே. எஸ் வீதி, தெல்லிப்பழை. [16109]

**A/L பொருளியல்**

A/L 91, 92. வகுப்புக்கள் செவ்வாய், வியாழன் 4Pm. ஆசிரியர் எஸ். சரவணபவான் B. A. [Hons] Fan Institute, டண்டத்தரிப்பு. [16110]

**ரைப்ரைட்டர்கள்**

Typewriters:- தமிழ் - ஆங்கிலம் வாங்கவும், விற்கவும். சிறந்த முறையில் திருத்தவும், எல்லாவித தட்டச்சு இயந்திரங்கள், உதிரிப்பாகங்களுக்கும் FUDO: 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [பஸ் நிலையம் முன்பாக] [சி-5835]

**ஏல விற்பனை**

இரண்டு மாடுகளும், இரண்டு கன்றுகளும் 1991 - 03 - 16ஆம் திகதி சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு, சங்க வளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. [5846]

**ஆங்கிலக்கல்வி**

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் சகல தரப்பினருக்கும் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தனிப்பட்ட முறையிலும், உங்கள் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். நேரில் அல்லது கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். S. ஜெயராஜா, 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். [16051]




★ தமிழ் [புதிய Keyboard]
★ ஆங்கிலம்

**ரைப்பிங் வகுப்புகள் நடைபெறுகின்றன.**

**பியூடோ**
39/17, மின்சார-நிலைய வீதி,
3 ஆம் ஒழுங்கை
யாழ்ப்பாணம். [சி/5847]

---

## விசேட அறிவித்தல்

**வெளிவாரி பட்டமானிப் பரீட்சைக்கான விசேட வகுப்புகள்**

மீண்டும் ஆரம்பம்: 16 - 03 - 1991

**G.A.Q. (92 Apr.) — B.A. (91 Dec.)**

## அஸ்ரன் இன்ஸ்ரியூட்

101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[மக்கள் வங்கிக்கு அருகாமையில்] [சி-5838]

---

## ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 11 - 11 - 1924



இறப்பு: 15 - 03 - 1990

**அமரர் எமிலி அதிசயமலர் சோமநாதர்**

அன்னாரது ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கும்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மான் விசுவல் லேன், உடுவில், சுன்னாகம். [16102]

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

**வில்பிரட் ரஞ்சித்**



அன்னாரின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பெற்றோர், சகோதரர்.

விதானையார் ஒழுங்கை, சுண்டிக்குளி. [16124]

---

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்

அமரர்
**புவனேஸ்வரி அரியராசா [B.A.]**
[ஆசிரியை, யா/ தாவடி இ. த. க. பாடசாலை]



எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்தியம் [15-03-91] இன்று வெள்ளிக்கிழமை பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து, அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், ஏனைய நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

''ஜெயந்தம்''
தாவடி தெற்கு, கொக்குவில். [16122]

---

## O/L 90 PAPER CLASS

சனி, ஞாயிறு

| | | | |
|---|---|---|---|
| 12-00 | COMMERCE | — | திரு. வில்வராஜா |
| 1-00 | MATHS | — | திரு. ராஜ்-தேவ் |
| 2-00 | SCIENCE | — | திரு. Bond + திரு. ராஜ்-தேவ் |
| 3-00 | TAMIL | — | திரு. திருஞானம் |
| 4-00 | SOCIAL | — | திரு. சிவராசா |
| 5-00 | ENGLISH | — | திரு. ராஜகோபால் |

ஆரம்பம்: 16 - 03 - 1991

## BOND INSTITUTES

58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [16120]

---

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம்

## பொதுக் கூட்டமும், நிர்வாகசபைத் தெரிவும்

தலைமை: பொன். மதிமுகராசா
[தலைவர்-வடபிராந்திய மினிபஸ் சேவை சங்க சமாஜம்]

இடம்:- ஞானபண்டித வித்தியாசாலை, கொக்குவில்.

காலம்:- 16 - 03 - 1991 சனிக்கிழமை மாலை 2-00 மணி.

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்கள், தொழிற் சங்க பிரதிநிதிகள், தொழிலாளர் அமைப்புப் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள்.

அமைப்பாளர்:
வண்ணார்பண்ணை. சு. ஞானசுந்தரம்.

சகல தொழிலாளர்களும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களை உறுப்பினராக பதிவு செய்யுங்கள். [16119]

---

## விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

[கலை, வர்த்தக வகுப்புக்களிற்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

**92**

**SAT: & SUN.**
**கலை, வர்த்தக வகுப்புக்கள்**

பிரிவு-2 ஆரம்பமாகிவிட்டன
நேரம்- 10.00 மணி

மு. குறிப்பு: எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படுகின்றது.
2. குறிப்பிட்ட மாணவர்களுக்கே அனுமதிகள் வழங்கப்படும்.
3. 91 ஆண்டிற்கான Day Classes பிரிவு - 2 ஆரம்பமாகவுள்ளது.

[சி-5839]

---

## ★ கீன் சென்ரர் ★

திருநெல்வேலி.

### A/L 91

தூய கணிதம் — ''வட்டம்''
சனி, ஞாயிறு - 2 - 4 மணி

பிரயோக கணிதம் — ''நீர் நிலையியல்''
சனி, ஞாயிறு - 8 - 10 மணி

### A/L 92

தூய கணிதம் — ''நுண் கணிதம்''
சனி, ஞாயிறு - 4 - 5 மணி

பிரயோக கணிதம் — ''காவிகள்''
சனி, ஞாயிறு - 5 - 6 மணி

ஆசிரியர்: திரு. பொன். ஈசன்

ஆரம்பம்: 16 - 03 - 1991

புதிய பிரிவு:
**Spoken English with Grammar**
திரு. A. றெஜினோல்ட்
சனி, ஞாயிறு 11 — 12-30 மணி [சி-5849]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### குற்றவாளியின் குற்றச்சாட்டு!

சர்வதேச மன்னிப்புச் சபை என்றால், ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு எப்போதுமே 'அலர்ஜி' தான். அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தில் அடங்கியுள்ள மனித உரிமைகளைப் பேணுவதாக ஐ. நா. சாசனத்தை ஏற்றுக்கொண்ட ஸ்ரீலங்கா அரசு, தானே மனித உரிமைகளை மீறுவதை வழக்கமாக்கி விட்டது. அரசின் அந்த மனித உரிமை மீறல்களை எடுத்துக்காட்டி, அம்பலப்படுத்திக் கண்டிப்பதும், அவ்வாறு செய்யவேண்டாம் எனக் கேட்டுக்கொள்வதும் சர்வதேச மன்னிப்புச் சபையின் வழக்கமாகிவிட்டது

அதன் பயனாக ஸ்ரீலங்கா அரசு குறித்து சர்வதேச மட்டத்தில் அபகீர்த்தியும், மதிப்பின்மையும் உண்டாகி வருகிறது. அதனால் ஸ்ரீலங்கா அரசு, மன்னிப்புச் சபை என்ற சொல்லைக் கேட்டாலே இடிகேட்ட நாகம் போலாகுவதில் வியப்பு ஒன்றும் இல்லை!

கடந்த பதினைந்து வருடங்களுக்கு மேலாக ஸ்ரீலங்கா அரசு, மன்னிப்புச் சபையை எதிர்ப்பதிலும், அது கூறுவது பொய் என்று வாதாடித் தன்னைப் பாதுகாப்பதிலும் கவனம் செலுத்துகிறதே அன்றி தான் விடும் தவறைத் திருத்திக்கொள்ள முயலவில்லை. மனித உரிமைகளை மீறுவதை நிறுத்திக்கொள்ள நினைக்கவில்லை. அதற்குப் பதில் மனித உரிமை மீறல்களை மேன்மேலும் தீவிரப்படுத்தி வருகிறது.

அவ்வாறு தவறிழைத்துக் கொண்டு, சர்வதேச மன்னிப்புச் சபை மீது குறை காணும் நோக்குடன் விதண்டா வாதமும் புரியத் தொடங்கியுள்ளது அரசு.

ஸ்ரீலங்காவில் அரசுக்கு எதிரான ஆயுதக் குழுக்கள் மனித உரிமைகளை மீறுவதை நியாயப்படுத்தும் விதத்திலும், தூண்டும் விதத்திலும் மன்னிப்புச் சபையின் பிந்திய அறிக்கை இருப்பதாக அரசு பதில் எழுதியிருந்தது.

அரசாங்கங்களுக்கு தத்தமது நாட்டுப் பிரசைகளுக்கும் சர்வதேச சமூகத்துக்குமான விசேட கடப்பாடு உண்டு. சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தில் அடங்கியுள்ள அடிப்படை அம்சங்களை அரசு பேண வேண்டும் — இவ்வாறு மன்னிப்புச்சபை பதிலடி கொடுத்திருக்கிறது.

அதாவது உன்னைத் திருத்திக் கொண்டு பிறரைத் திருத்தப் புறப்படு என்பதை மறைமுகமாக அரசுக்கு இடித்துரைத்திருக்கிறது. அரசாங்கம் தானே குற்றஞ்செய்து கொண்டு, ஆயுதக் குழுக்களை குற்றவாளிகள் என்று கூற முனைகிறது. இது பெரும் கேலிக்குரியதாகும்!

குற்றவாளி ஒருவன் பிறரைத் தண்டித்து நீதி வழங்கப் புறப்படும் அபத்தம் போல, அரசு ஆயுதக் குழுக்கள் மீது குறை கூறுவதை விட்டு தன்னைத் தானே திருத்திக் கொள்ள வேண்டும். இனியாவது அது அந்தத் திசையை நோக்குமா? ஆயுதப் படைகள், சொந்தக் குழுக்கள் மூலம் நடத்தும் மனித உரிமை மீறல்களை நிறுத்துமா?

# செட்டிகுளம் பகுதியில் கட்டடங்கள் குண்டு வைத்து தகர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 15

செட்டிகுளம் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் அப்பகுதியில் பல கட்டடங்களைக் குண்டுவைத்துத் தகர்த்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

செட்டிகுளம் கொத்தணி மகாவித்தியாலயம், அந்தோனியார் கோவில், பிள்ளையார் கோவில் ஆகியவற்றை உள்ளடக்கிய பகுதியில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர்.

அருகில் உள்ள ரயில் நிலையம், ஆஸ்பத்திரி, விவசாய உற்பத்தி நிலையக் கட்டடம் ஆகியவை உட்பட பல கட்டடங்களை இராணுவத்தினர் குண்டு வைத்துத் தகர்த்து, புல்டோஸர் கொண்டு தரை மட்டமாக்கியுள்ளனர்.

முகாம் பகுதியை வெளியாக்கும் நோக்குடன் முகாமைச் சூழ சுமார் இரண்டு மைல் தூரத்திற்குட்பட்ட பகுதியில் உள்ள சகல வீடுகளையும் குண்டு வைத்துத் தகர்த்து, தரைமட்டமாக்கியும் உள்ளனர்.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக செட்டிகுளப் பகுதியிலிருந்து சுமார் 5 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ்க் குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. [உ-15]

### மறுமலர்ச்சிக் கழக ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தின் பதினோராவது ஆண்டு நிறைவு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். [இ]

## இந்தியாவால் திரும்பிய குடும்பங்களுக்கு நிவாரணம்

இந்தியாவில் இருந்து 1988 ஆம் ஆண்டு கப்பல் மூலம் தாயகம் திரும்பிய 1225 அகதிக் குடும்பங்களுக்கான நிவாரண உதவிக் கொடுப்பனவுகள் இம்மாதம் 29 ஆம் திகதி முதல் யாழ். செயலகத்திலும், கரவெட்டி உதவி அரச அதிபர் அலுவலகத்திலும் வைத்து வழங்கப்பட உள்ளன.

இந்தக் குடும்பங்களுக்கு கால்சாலையாக இந்தக் கொடுப்பனவுகள் குறிக்கப்பட்ட தினங்களில் காலை 9 மணி முதல் 12 மணி வரை வழங்கப்படும் என்று செயலகம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் உ. அ. அ. பிரிவிற்கு உட்பட்டவர்களுக்கு 29-03-91 இலும் நல்லூர், தெல்லிப்பழை, உடுவில் பிரிவினருக்கு 30-03-91 இலும், கோப்பாய், சாவகச்சேரி, சங்கானை, வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய பிரிவினருக்கு 31-03-91 இலும்கொடுப்பனவுகள் யாழ். செயலகத்தில் வைத்து வழங்கப்படும்.

கரவெட்டி பிரிவினருக்கு 6-4-91 இலும், பருத்தித்துறை, மருதங்கேணி பிரிவினருக்கு 7-4-91 இலும், கரவெட்டி உ. அ. அதிபர் பணிமனையில் வைத்துக் கொடுப்பனவுகள் வழங்கப்படும். [இ-3]

## ஸ்ரான்லி வீதி இலங்கை வங்கி: நாளை நிவாரணம் கிடைக்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ். ஸ்ரான்லி வீதி இலங்கை வங்கிக் கிளையில் நாளை சனிக்கிழமை மீளக் குடியமர்தல் நிவாரணம் ஆயிரம் ரூபாவும், முன்னர் எடுக்கத் தவறியவர்களுக்கு 2 ஆயிரம் ரூபாவும், மற்றும் உற்பத்தித்திறன் வாய்ந்த தொழில் முயற்சிக்கான நிவாரணம் [ரூ. 4 ஆயிரம்] போன்ற கொடுப்பனவுகள் வழங்கப்பட உள்ளன.

முன்னர் பெயர் அறிவிக்கப்பட்டு எடுக்கத் தவறியவர்களுக்கே அன்று கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**ரூபா 1,000**

அரியாலை கிழக்கு, அரியாலை மத்தி, வண் - வடமேற்கு, வண்-வட கிழக்கு, கந்தர்மடம், நல்லூர் வடக்கு, திருநெல்வேலி மேற்கு, திருநெல்வேலி கிழக்கு, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் கிழக்கு, கொக்குவில் மேற்கு, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் மத்தி ஆகிய கி. சே. பிரிவுகளைச் சேர்ந்த 503 குடும்பங்களுக்கு ரூபா ஆயிரமும்—

**ரூபா 2,000**

அரியாலை கிழக்கு, அரியாலை மத்தி, வண். வட கிழக்கு, கந்தர்மடம், நல்லூர் வடக்கு, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் கிழக்கு, கொக்குவில் மேற்கு, கொக்குவில் கிழக்கு ஆகிய கி. சே. பிரிவுகளைச் சேர்ந்த 71 குடும்பங்களுக்கு 2 ஆயிரம் ரூபாவும்—

**ரூபா 4,000**

வண். வடமேற்கு, கந்தர்மடம், நல்லூர் வடக்கு, நல்லூர் தெற்கு, திருநெல்வேலி கிழக்கு கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் கிழக்கு கொக்குவில் மத்தி, ஆகிய கி. சே. பிரிவுகளைச் சேர்ந்த 151 குடும்பங்களுக்கும் 4 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட இருக்கின்றது. [ஒ]

## வங்கிகள்-நிதிநிறுவனங்கள்; ஆராய்வதற்கு ஆணைக்குழு

கொழும்பு, மார்ச் 15

மத்திய வங்கி, வர்த்தக வங்கிகள், அபிவிருத்தி வங்கிகள், மேர்ச்சண்ட் வங்கிகள், பினான்ஸ் கம்பனிகள் உட்பட ஏனைய நிதி நிறுவனங்கள், கிராமிய மற்றும் கூட்டுறவு கடனுதவிச் சங்கங்கள் ஆகியவற்றின் செயற்பாடுகள் பற்றியும் —

வங்கி மற்றும் நிதி தொடர்பான தேசியக் கொள்கை ஒன்றை வகுப்பதற்கான முன்னுரிமைகள் பற்றியும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழு உறுப்பினர்களாக எண்மரை ஜனாதிபதி நியமித்துள்ளார். [illegible] பற்றிய விவரம் வருமாறு;

டாக்டர் எம். ஆர். பி. சல்காது [தலைவர்], பேராசிரியர் டபிள்யு. டி லக்ஷ்மன், திருவாளர்கள் குணசிங்கம், திரு. எம். டி. பீரிஸ், டி. எஸ். ஜெயசுந்தர, கே. குணரத்தினம், சுசில் சிறிவர்த்தனா, டாக்டர் ஏ. எம். எம். சஹாப்தீன்.

இந்த ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு குறிப்பிடப்பட்ட விஷயங்கள் பற்றி யோசனைகளை சமர்ப்பிக்க விரும்பும் சகலரும், மற்றும் அமைப்புக்களும் அவற்றை எழுத்து மூலம் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்க [illegible] [இ-ஏ]

### வீடு பார்க்க சென்றவர் திரும்பவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 15

செட்டிகுளம் பகுதியில் வீடு பார்க்கச் சென்றவர் திரும்பவில்லை.

முகத்தான் குளத்தைச் சேர்ந்த சின்னையா [வயது 52] என்பவருக்கே இந்தக் கதி ஏற்பட்டது. [இ-15]

## தடுப்பூசி மருந்து இல்லை

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ். போதனா வைத்திய சாலையில் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கான தடுப்பூசிகள் அனைத்தும் முடிவுற்றதால் தடுப்பூசி ஏற்ற குழந்தைகளைக் கொண்டு வரும் பெற்றோர் ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்.

கடந்த மாதம் கொழும்பிலிருந்து அனுப்பப்பட்ட ஊசி மருந்து சுமார் 1,500 குழந்தைகளுக்கு மாத்திரமே போடப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமையுடன் ஊசி மருந்து முற்றாக முடிவடைந்து விட்டது. [இ-15]

### மக்கள் முன்னணியின் கருத்தரங்குகள்

புங்குடுதீவு, மார்ச் 15

கடந்த மாதம் நடுப்பகுதியில் இருந்து புங்குடுதீவுப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினால் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இக்கருத்தரங்குகளின் போது மாவீரன் "போர்க்" சம்பந்தப்பட்ட மாங்குளம் முகாம் தாக்குதல், கொக்காவில் தாக்குதல் பற்றிய வீடியோ திரைப்படங்களும் காட்டப்பட்டு வருகின்றன. [இ-131]

### துப்பாக்கிச் சூட்டில் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 15

முள்ளியவளையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சின்னத்தம்பி செல்வராசா [வயது 25] என்பவர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

துப்பாக்கியால் சுட்டவர் விடுதலைப் புலிகளினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். [இ - 15]

### சவர்க்கார விற்பனையில் தந்திரம்

அச்சுவேலியில் சன்லைட் சவர்க்கார விற்பனையில் புதிய நடைமுறை கடைப்பிடிக்கப்படுகிறது.

ஒரு சன்லைட் சவர்க்காரக் கட்டியை ரூ. 8,25 சதத்துக்கு வாங்குவதற்கு கிலோ 40 ரூபா விலையில் கால் கிலோவிற்கு குறையாத அளவு புளி வாங்க வேண்டுமாம்.

ஆனால் ஒரு கிலோ புளி 15 ரூபாவில் இருந்து 22 ரூபா வரை ஏனைய இடங்களில் விற்பனையாகின்றது. [இ-11]

### கட்டாக்காலிகள்

மண்டைதீவு, அல்லைப்பிட்டிப் பகுதிகளில் கட்டாக்காலி மாடுகளைப் பிடிக்கும் வேலைகள் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. [இ-125]

## பாரதீய ஜனதா - சந்திரசேகர் தொகுதி உடன்பாடு முயற்சி

புதுடில்லி, மார்ச் 15

பிரதமர் சந்திரசேகர் தலைமையிலான ஜனதா தள் சோஷலிஸ்ட் கட்சி பாரதீய ஜனதாக்கட்சியுடன், தொகுதி உடன்பாடு காணக் கூடிய சூழ்நிலையை உருவாக்கியுள்ளதாகக் கூறப்படுகிறது. பாட்னாவில் செய்தியாளர் மத்தியில் பிரதமர் சந்திரசேகர் இதுகுறித்து சூசகமாகத் தெரிவித்தார்.

தொகுதிஉடன்பாடுகாணப் படுவதற்கு 'தீண்டத் தகாத கட்சிகள்' என்று எந்தக்கட்சியையும் நான் புறக்கணிக்கப் போவதில்லை என்று பிரதமர் சந்திரசேகர் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இந்து மதவாதக் கட்சியாக விளங்கும் பாரதீய ஜனதாவுடன் எந்தவிதத் தொடர்பும் வைத்துக்கொள்ளப் போவது இல்லை என்று வி. பி. சிங் தலைமையிலான தேசிய முன்னணியும் இந்திரா காங்கிரஸும் ஏற்கனவே அறிவித்துள்ளன. [இ-எ]

## ஈரானுக்கு புஷ் எச்சரிக்கை

ஈராக்கில் இடம்பெற்று வரும் உள்நாட்டுச் சண்டையில் தலையிட வேண்டாம் என்று ஈரானை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் எச்சரித்திருக்கிறார்.

ஈராக்கில் ஸ்திரமின்மை நிலவுவது குறித்துத் தாம் பெரிதும் கவலை அடைவதாகவும் ஜனாதிபதி புஷ் தெரிவித்தார்.

ஜனாதிபதியாக சதாம் ஹுசேன் இருக்கும்வரை ஈராக்குடன் அமெரிக்கா நல்லுறவை வளர்ப்பது மிகவும் கஷ்டமான காரியமாக இருக்கும் என்றும் ஜனாதிபதி புஷ் சொன்னார்.

## சதாமை வீழ்த்த கோரிக்கை

பேரூட், மார்ச் 15

சதாம் ஹுசேனைப் பதவி கவிழ்க்கும்படி ஈராக் ஆயுத படையினருக்கு 20க்கு அதிகமான அரசு எதிர்ப்புக் குழுக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

லெபனான் தலைநகர் பேரூட்டில் நடைபெற்ற மூன்று நாள் மாநாட்டின் முடிவில் இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

சதாமை பதவி கவிழ்ப்பதன் மூலமே ஈராக்கின் ஐக்கியத்தைப் பாதுகாக்க முடியும் என்றும் எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன. [இ-எ]

## ஆஸாத் - பேக்கர் சந்திப்பு

பலஸ்தீனியப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவது குறித்து சிரிய ஜனாதிபதி ஆஸாத்துடன் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் சுமார் ஏழு மணி நேரம் பேச்சுக்கள் நடத்தினார் என்று அறிவிக்கப்பட்டது.

மத்திய கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்கான வாய்ப்பு என்றுமே இல்லாத வகையில் இப்போது சாதகமாக உள்ளதாக திரு. பேக்கர் சொன்னார். [இ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திரு. கந்தையா கனகசபை
(பொன்னம்பலம்)

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், 250, அரசடி வீதி, சந்தர்மடம் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாக கொண்டவருமான திரு. கந்தையா கனகசபை 14-3-1991இல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற கந்தையா - வள்ளியம்மையின் அன்பு மகனும், நாகரெத்தினத்தின் அன்புக்கணவரும், அன்னலெட்சுமி [பிரான்ஸ்], திரு. கனகலிங்கம் [இந்தியா], கமலாதேவி, பாக்கியராஜ் [பிரான்ஸ்], திரு. தனபாலசிங்கம் [கனடா], விமலாதேவி [கனடா], சிறிதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. அச்சலிங்கம் [பிரான்ஸ்], சகுந்தலாதேவி [இந்தியா], திரு. சண்முகநாதன் [பிரான்ஸ்], மந்தாயினி [பிரான்ஸ்] ஆகியோரின் அன்பு மாமனாரும், வாசுகி, கோகிலதாஸ், கோபிநாத், கோபிசரன், கார்த்திகேயினி, சேனுகேயினி, லாவன்யா ஆகியோரின் பேரனும், திருமதி செல்லம்மா, காலஞ்சென்ற திருமதி சண்மணி, திருமதி பொன்னம்மா, காலஞ்சென்ற திரு. நாகரெத்தினம், திரு. வேலாயுதம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 14-3-1991 3 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது உற்றார், உறவினர், நண்பர்கள் இதனை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு. க. சிறிதரன்
[மகன்]

[16115]

## திருமதி கந்தையா இராசம்மா

இலக்கம் 156, கோவில் வீதி, நல்லூரைச் சேர்ந்த திருமதி கந்தையா இராசம்மா கடந்த 5-3-91 அன்று அகால மரணமடைந்து விட்டார்

இவர் திருமதி க. இராசமணி, திருமதி த. கமலேஸ்வரி, திருமதி ந. நாகேஸ்வரி, திருமதி க. தியகேஸ்வரி, திரு. க. மகேந்திரன் ஆகியோரின் அருமைத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் 5 - 3 - 91 அன்று மாலை செம்மணி மயானத்தில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
க. தியாகேஸ்வரி.

]16118]

## கந்தையா இராஜரட்ணம்
[ஒய்வுபெற்ற பிரதமஇலிகிதர் பொலிஸ் திணைக்களம்]

தெல்லிப்பழை - மகாதனையைப் பிறப்பிமாகக் கொண்டவரும் உடுவிலில் வசிப்பவருமாகிய கந்தையா இராஜரட்ணம் அவர்கள் 14 - 3 - 91இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற சிவஞானம்மாவின் அன்புக் கணவரும், சந்திரகுமார் [சவூதி அரேபியா]. திருமதி செல்வராணி [நோர்வே], திருமதி சிவசக்தி (யாழ்-பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறை கைதடி, 5 ஆம் வருடம்], ஜீவராணி [யாழ் பல்கலைக்கழகம் - கலைப் பீடம் 3 ஆம் வருடம்], செல்வி கலைவாணி [யாழ்-பல்கலைக்கழக முகாமைத்துவம் - 1ஆம் வருடம்] ஆகியோரின் அன்புத் தந்தையும் விமலாதேவி, ஸ்ரீசரன் [தொழில்நுட்ப உத்தியோகத்தர்-நோர்வே]. Dr பாலகுமார் [குமரன் டிஸ்பென்சறி உடுவில்] ஆகியோரின் அன்பு மாமனாரும், டிலானி, தாட்சாயினியின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 15 - 3 - 91 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
இ. சந்திரகுமார்
[மகன்]

சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு
சுன்னாகம்.

[15910]

## குழந்தைவேலு செட்டியார் நடராசா

நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த திரு. குழந்தைவேலு செட்டியார் நடராசா [ஓய்வுபெற்ற சுகாதார பரிசோதகர்] அவர்கள் 12 - 3 - 91 செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார். இவர் இரத்தினவள்ளியம்மாவின் [பத்மா- கனடா] அன்புக்கணவரும் பிரமேந்திரா [கனடா], சுரேந்திரா [கனடா], புலேந்திரன் [கனடா], ஹரீந்திரன் [கனடா], தாரணி [கனடா], அமிர்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் காயத்திரி [கனடா], ரதி [கனடா], சாந்தி [கனடா] சுதமதி [கனடா] சிறீசண்முகம் [கனடா], கணேஷன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சுகன்யா, அர்ஜுன், பிரதீபா, ராஜீவ், தாஷா, மேனகா, கிருஷாந்தன், மனோஜ், வைஷ்ணஜா, ஹரன். லஷ்சுமி, சயந்தன் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும். காலஞ்சென்ற திருமதி யோகம்மா சிவசுப்பிரமணியத்தின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற திரு. திருமதி தம்புவின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் கனடாவில் நேற்று (14 - 3 - 91) வியாழக்கிழமை நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி அமிர்தினி கணேஷன்
[மகள்]

286, நாவலர் வீதி,
நல்லூர். யாழ்ப்பாணம்.

[15909]

## பென்ஷன் வவுச்சர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 15

இன்று வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் 'குமணை' கப்பலில் ஜனவரி, பெப்ரவரி மார்ச் மாதங்களுக்குரிய பென்ஷன் வவுச்சர்கள் எடுத்து வரப்படுகின்றன. [ஒ-3]

## தொழிலாளி படுகாயம்

யாழ்ப்பாணம், மார்ச் 15

பருத்தித்துறை துறைமுகத்தில் நேற்று கப்பலிலிருந்து பொருள்களை இறக்கும் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளி ஒருவர் கடலில் தவறி விழுந்து படுகாயமடைந்தார்.

காயமடைந்த இராச கிராமத்தைச் சேர்ந்த கந்தசாமி குகன் [வயது 17] நினைவிழந்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, அங்கிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார். [ஒ-15]

## 4 படையினர் உயிரிழப்பு

கொழும்பு மார்ச் 15

வவுனியாவுக்கு வடக்கே கதிர்காமர் சின்னக்குளத்தில் இடம்பெற்றமோதல் ஒன்றில் 4 படையினர் உயிரிழந்தனர் என்று ஜெனரல் சிறில் ரணதுங்க நேற்று செய்தியாளரிடம் தெரிவித்தார். [ஒ-எ]

## இளைஞரை காணவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 15

திருகோணமலை மாவட்டம் பள்ளிக்குடியிருப்பில் இருந்து கிளிவெட்டிக்கு கடந்த 9 ஆம் திகதி சென்ற சித்திரவேல் பத்மநாதன் [23 வயது] என்ற இளைஞரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது [ஒ]

## மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 15

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்களுக்கான மாதாந்த ஒன்று கூடல் நாளைசனிக்கிழமை முற்பகல் 10.00மணிக்கு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [ஒ]

## சாரதிகள் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், மார்ச்15

வவுனியாவில் இருந்து வடக்கே வர படையினர் அனுமதித்த லொறிகளின் சாரதிகள், கிளீனர்களை புளொட் அமைப்பினர் தாக்கியதாகக் கூறப்பட்டது [ஒ-3]

## அமைச்சரவை..
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மாண மற்றும் சமூகநலத் துறை அமைச்சராக பதவி வகித்து வந்த திரு. ஏ. எம். எஸ். அதிகாரி, தபால், தொலைத் தொடர்பு அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

தபால் தொலைத்தொடர்பு அமைச்சர் பதவியை வகித்து வந்த திரு. அலிக் அலுவிஹாரா துறைமுக, கப்பற்றுறை அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

துறைமுக, கப்பற்றுறை அமைச்சராக பணியாற்றிய திரு. ரூபா கருணாதிலக பெருந்தோட்டத் தொழிற்றுறை அமைச்சராக நியமிக்கப்பட்டார். பெருந்தோட்டத் தொழிற்றுறை அமைச்சர் பதவியை அண்மையில் கொல்லப்பட்ட திரு. ரஞ்சன் விஜேரத்தினா இறக்கும் வரை வகித்து வந்தது தெரிந்ததே.

புதிய அமைச்சர்கள் நேற்று [illegible] பிரமாணம் செய்துகொண்டனர். [ஒ-எ]

## சர்வதேச செஞ்சிலுவைக்கு அமெரிக்கா ரூ. 4 கோடி நிதி

இலங்கையில் செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழு தனது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அவசர நிதியில் இருந்து நான்கு கோடி ரூபாவை வழங்குவதற்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் நேற்று அங்கீகாரம் அளித்தார்.

வாஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதரிடம், அமெரிக்க வெளியுறவு அமைச்சில் உள்ள அகதிகள் பிரிவுச் செயலாளர் நேற்று இத்தகவலை வெளியிட்டார்.

இலங்கையில் தனது நடவடிக்கைகளை மேற்கொள்ள 52 கோடி ரூபாவை தந்து உதவும்படி செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழு அமெரிக்க அரசுக்கு முன்னர் வேண்டுகோள் விடுத்திருந்தது.

அக்கோரிக்கையை அடுத்தே 4 கோடி ரூபாவை அன்பளிப்பாக வழங்க ஜனாதிபதி புஷ் உத்தரவிட்டுள்ளார்.

## சதாம் எதிர்ப்புக் கிளர்ச்சி பக்தாத்திற்கு பரவியது

அரசு எதிர்ப்புக் கிளர்ச்சி ஈராக் தலைநகர் பக்தாத்திற்கும் பரவியிருப்பதாக ஈரானிய செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

ஈராக் தெற்குப் பகுதியில் கிளர்ச்சிப் படைகள் கடும் சண்டையின் பின்னர் அரசுப் படையினரிடமிருந்து பல டாங்கிகளைக் கைப்பற்றின என்றும் ஈரானிய செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

அரசு எதிர்ப்புக் கிளர்ச்சியை அடக்க ஜனாதிபதி சதாம் ஹுசேனுக்கு விசுவாசமான படைகள் ஹெலிகொப்டர்கள் மூலமும் தாக்குதல் நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## தடைப்பட்ட..
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வழியாகவும் —சைக்கிள்காரர்களை செல்ல படையினர் அனுமதித்தனர்.

வவுனியா நகருக்கு அப்பாலும் பல லொறிகள் வடக்கே வர காத்து நிற்கின்றன என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ-5]

## திலகருடன்..
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தும்—

அவற்றின் பொருட்டு இருதரப்பாரும் மேற்கொள்ள வேண்டிய படிமுறைகள் (Modalities) குறித்தும்— இருவரும் பேசியிருக்கக்கூடும் என்று வேஹஸ்யம் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகவல் குறித்து, நேற்றுக் கொழும்பில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் திரு. பிரட்மன் வீரக்கோனிடம் கேட்கப்பட்டது.

எனினும் அவர் அதற்கு நேரடியாகப் பதிலளிக்கவில்லை வேறு விதமாக மறைமுகமாகச் சொன்னார்.

"லோரன்ஸ் என்பவருடன் உத்தியோகப் பற்றற்ற முறையில் பேசினேன். அவர் அரசு சார்பற்ற நிறுவனம் ஒன்றைச் சேர்ந்தவர். தாம் விடுதலை என்ற நிறுவனத்தின் பிரதிநிதி" என்று அவர் கூறினார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது தனித்தமிழீழக் கோரிக்கையை இன்னும் கைவிடவில்லை என்றும் லோறன்ஸ் சொன்னார்"—என்று பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார். [அ-3]

## மன்னர் அல்சபா திரும்பினார்

குவைத் மன்னர் அல்சபா நேற்று தாயகம் திரும்பினார்.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி குவைத்தை ஈராக்கிய இராணுவம் ஆக்கிரமித்ததைத் தொடர்ந்து, மன்னர் அல்சபா சவூதி அரேபியாவில் தஞ்சம் அடைந்திருந்தார். 7 மாதங்களின் பின்னர் நேற்று அவர் குவைத் போய்ச் சேர்ந்தபோது அங்கு மன்னர் ஆட்சியை ஒழித்து ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்தும்படி கோரி ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன [உ-எ]

## யாழ்..
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களுக்கு விளக்கமாக எடுத்துரைத்தேன். எமது மக்களுக்கு தொடர்ந்து நிவாரணம் வழங்கவேண்டியதன் அவசியத்தை அவர்களிடம் வலியுறுத்தினேன்—

யாழ். மாவட்டத்தை மோசமாக பாதிக்கப்பட்ட பகுதியாக ஏற்று உலர் உணவு வழங்க வேண்டும். என்றுவிடுத்த கோரிக்கையை அங்குள்ள அதிகாரிகள் ஏற்றுக் கொண்டுள்ளனர். அதற்கென விசேட திட்டங்களையும் வகுத்துள்ளனர். அவற்றின் விவரங்களை [இன்று] வெள்ளிக்கிழமை வெளியிடுவேன் - என்றும் அரச அதிபர் கூறினார். [அ-3]

# மரண அறிவித்தல்

## சீமாம்பிள்ளை மரியாம்பிள்ளை
[இளைப்பாறிய பாடசாலை அதிபர்]

சரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தும்பனையை வசிப்பிடமாகக் கொண்டவருமான சீமாம்பிள்ளை மரியாம்பிள்ளை காலமானார். இவர் மேரிமாகிறெட்டின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சங்கைக்குரிய சகோதரி லோறன்ஸ் அவர்களின் அன்புச் சகோதரரும் அன்ரன் யோகானந்தன், மேரி வசந்தா [லண்டன்], மேரி றஞ்சினி, [ஆசிரியை வல்வை மகளிர் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தந்தையும் றஞ்சித்குமார் [லண்டன்], டாக்டர் கலாவதி [கொழும்பு] ஆகியோரின் மாமனாரும் ஞானப்பிரகாசம், மனுவேல் பிள்ளை, கிளாறம்மா ஆகியோரின் மைத்துனரும் எறோன், விவேக், சிந்துஜா, ஜெசிற்றா, செபஸ்தியன், றாஜ்குமார் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரது நல்லடக்கம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
A. C. ஞானப்பிரகாசம்

(15911)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 15-03-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org